# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.21

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | இளஞ்செழியன் | Caste: | |
| Father's Name: | சங்கர் | Calling: | காவல்துணைக் கண்காணிப்பாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 53 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.08.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது கமுதி உட்கோட்ட காவல்துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.03.2024ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் பெறப்பட்ட உத்தரவு எண். C.No. 08/SJ& HR/RMD/2024, Dated: 29.03.2024 பிரகாரம் கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 30.03.2024ம் தேதி சாட்சிகள் தாமரை செல்வி, முருகவேல் , கரண், முனீஸ்வரி, போஸ், சுப்பு, காவியா, கோட்டைச்சாமி, முனியசாமி, சந்திரசேகர், குப்பை சாகிபு, ரகமத்துல்லா, வீரப்பன், சுப்பையா, சிவலிங்கம், உக்கிரபாண்டி ஆகியோர்களை விசாரணை செய்தபோது அவர்கள் ஏற்கனவே காவல் ஆய்வாளரிடம் கூறியதுபோல் என்னிடமும் கூறியதால் அவர்களின் வாக்குமூலங்களை நான் தனியாக பதிவு செய்யவில்லை. மேலும் அன்றே

சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் ஏற்கனவே காவல் ஆய்வாளர் பதிவு செய்தததுபோல் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. 01.04.2024 ம் தேதி சாட்சிகள் தலைமை காவலர் 1058 அன்னபூரணம் பாதிக்கப்பட்ட பெண் தாமரை செல்வியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த பணிக்கப்பட்டதால் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மு.நி.கா. 480 முத்துமாரி பாதிக்கப்பட்ட பெண் தாமரை செல்வியிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தடய சொத்துக்களை பகுப்பாய்வுக்காக இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைத்துள்ளார். எனவே அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மு,நி.கா. 558 பாண்டியராஜன் எதிரிகள் 1 அஜித் என்ற விக்னேஷ்வரன், 2 பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமார் என்பவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தடய சொத்துக்களை பகுப்பாய்விற்காக இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்துள்ளார். எனவே அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மு.நி.கா. 1724 விக்னேஷ் மற்றும் மு.நி.கா. 2160 வெங்கடேஷ் மேற்கூறிய இரண்டு எதிரிகளையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த பணிக்கப்பட்டதன்பேரில் மருத்துவ பரிசோதனைக்கு ஆஜர்படுத்திய நபர்கள். அவர்களையும் விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 02.04.2024 ம் தேதி வழக்கின் வாதி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் பெற்றேன். பின்பு சாதி சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் சேதுராமன், வேலவன், கோபிநாத், குப்புச்சாமி, பாண்டி, சங்கர்ராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்பு 03.04.2024 ம் தேதி அப்துல் ரகுமான் மற்றும் ஆய்வாளர் குருநாதன்

ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 07.04.2024ம் தேதி கமுதி நீதித்துறை நடுவர் நீதிமன்ற தலைமை எழுத்தர் முனியசாமி என்பவரை இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை பெற்று நீதிமன்றத்தில் எண் கொடுத்ததால் மேலும் கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 வழக்கு சம்பந்தப்பட்ட வழக்கு கோப்பினை கமுதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததால் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி அப்துல்ரகுமான் 1ம் எதிரி அஜித் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட செல்போனில் இருந்த வீடியோ மற்றும் புகைப்பட பதிவுகளை அவருடைய ஸ்டுடியோவில் இருந்து பதிவிறக்கம் செய்து கொடுத்ததுடன் பதிவிறக்கம் செய்ததற்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 Bன் கீழ் சான்று வழங்கியதால் அவரை விசாரித்து சான்று பெற்றேன். 08.04.2024ம் தேதி இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் பகுப்பாய்வு அறிக்கைகள் பெற்று தடய அறிவியல் அலுவலர் தங்கவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.04.2024ம் தேதி பாதிக்கப்பட்ட பெண் தாமரை செல்வியை மருத்துவ பரிசோதனை செய்த அரசு மருத்துவர் அபிஷேக மேரி அவரிடமிருந்து மருத்துவ சான்று பெற்றும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு த.கா. 614 மகாலிங்கம் என்பவரை இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் புலன் விசாரணை அதிகாரிகள் சொல்ல சொல்ல கணினியில் தட்டச்சு செய்ததை பற்றி அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 11.07.2024ம் தேதி வழக்கில் கைப்பற்றப்பட்ட செல்போனை நீதிமன்றம் மூலம் சென்னை தடயவியல் ஆய்வகத்திற்கு ஆய்வுக்கு உட்படுத்தியும், மேலும் இவ்வழக்கின் எதிரி பயன்படுத்திய செல்போனின் எண்.

8667856574 என்ற எண்ணிற்கான அழைப்பு விவரங்களை மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகம் மூலமாக சம்பந்தப்பட்ட நோடல் ஆபிசர் மூலம் வரப்பெற்ற அறிக்கையை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். பின்பு எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC r/w. 3(1)(r), 3(1)(s), 3(1)(w)(i), 3(2)(va) of SC/ST (POA) Act 1989 பிரகாரம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்னை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்து பிறப்பித்த உத்தரவு **அ.சா.ஆ.30.** பாதிக்கப்பட்ட பெண் தாமரை செல்வியிடமிருந்து பெறப்பட்ட தடய சொத்துக்களை ஆய்வு செய்து இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநர் பாலமுருகன் வழங்கிய அறிக்கை **அ.சா.ஆ.31**. இவ்வழக்கின் 1,2 எதிரிகளான அஜித் என்ற விக்னேஷ்வரன் மற்றும் பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமார் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தடய சொத்துக்களை ஆய்வு செய்து இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநர் பாலமுருகன் வழங்கிய அறிக்கை **அ.சா.ஆ.32.**

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எனது உட்கோட்ட கட்டுப்பாட்டில் உள்ள காவல்நிலையங்களில் நடக்கும் சம்பவங்கள் குறித்தும் அந்த சம்பவங்கள் குறித்து பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கைகள் குறித்தும் எனக்கு அன்றாடம் தகவல் கொடுக்கப்படும் என்றால் சரிதான். இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றே அதுசம்பந்தமாக என் பார்வைக்கு கொண்டு வரப்பட்டது என்றால் நான் 20.03.2024 அன்றுதான் கமுதி உட்கோட்ட காவல்துணைக்கண்காணிப்பாளராக பொறுப்பேற்றேன்.

எனக்கு முன்பு இருந்த காவல்துணைக்கண்காணிப்பாளர் யார் என்றால் திரு. அண்ணாதுரை. திரு. அண்ணாதுரை என்பவருக்கு இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றே தெரிந்திருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். இந்த வழக்கு கூட்டு பாலியல் பலாத்கார வழக்கு என்றால் சரிதான். மேலும் பாதிக்கப்பட்ட பெண் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் நான் பதவியேற்ற பின்பு தெரியும். எதிரிகள் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரை சேர்ந்தவர்கள் என்பதும் நான் பதவியேற்ற பின்பு எனக்கு தெரியும் என்றால் சரிதான். காவல்துணைக்கண்காணிப்பாளருக்கு அவருடைய உட்கோட்ட எல்லைக்குட்பட்ட காவல்நிலையங்களில் நடக்கும் குற்ற சம்பவங்கள் குறித்து முழு விவரங்களும் தெரியும் என்றால் சரிதான். குற்றம் சம்பந்தப்பட்ட முழு விவரங்கள் கிடைத்த பிறகு நான் எனது மேலதிகாரிகளுக்கு அது குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். ஒரு வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு புலன் விசாரணை செய்தவுடன் வழக்கில் சம்பந்தப்பட்ட புகார்தாரர் மற்றும் எதிரிகளின் விவரம் குறித்து தெரியும் என்றால் எல்லா வழக்குகளிலும் தெரிய வாய்ப்பில்லை. அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படக்கூடிய வழக்குகளில் புகார்தாரர் மூலம் எதிரிகளின் பெயர் விவரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பெரும்பான்மையான புலன் விசாரணைகளை காவல் ஆய்வாளரே செய்துவிட்டார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிறகு 1ம் எதிரியிடம் இருந்து கஞ்சா கைப்பற்றப்ட்டட விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அதுசம்பந்தமாக

தனியாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கின் தற்போதைய நிலை குறித்து தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு ஒரு சில மணி நேரம் முன்பாக 1ம் எதிரி மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் 1ம் எதிரி முதுகுளத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வேறொரு வழக்கில் நிபந்தனை கையெழுத்து செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வழக்கில் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சிகளை யாரையும் நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து எழுதிக்கொள்ளப்பட்டவை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தயார் செய்ததாக மற்றும் சேகரித்ததாக சொல்லப்படும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரியாக புலன் விசாரணை செய்யாமல் 1ம் எதிரியை தவறாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையே சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. சட்ட காலம் கடந்து பட்டியல் மற்றும் பழங்குடியின வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கும் 1ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்து குறுக்கு விசாரணை இல்லையென அவரது வழக்கறிஞர் தெரிவித்தார்.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது உட்கோட்டத்திற்குட்பட்ட கமுதி காவல்நிலையத்தில் கடந்த 27.01.2024ம் தேதி கமுதி கோட்டை மேடை சேர்ந்த ராமகிருஷ்ணன் மற்றும் மதுவதனி தம்பதியரின் மகள் புஷ்பராகவி என்பவரை இந்த வழக்கின் 3ம் எதிரி சூர்யா கடத்தி சென்றுவிட்டதாகவும், அவரிடமிருந்து புஷ்பராகவியை மீட்டு தரும்படியும் ராமகிருஷ்ணன் தம்பதியினர் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 29.01.2024ம்தேதி 3ம் எதிரி சூர்யாவிடமிருந்து புஷ்பராகவியை மீட்டு அவர்கள் இருவரையும் கமுதி காவல்நிலையத்திற்கு கொண்டுவந்து வைத்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. புஷ்பராகவியின் குடும்பத்தார் பண செல்வாக்கு உள்ளவர்கள் என்பதால் அவர்கள் வழக்கு எதுவும் பதிவு செய்யாமல் புஷ்பராகவியை பெற்றோருடன் அனுப்பி வைத்து விட்டு சூர்யாவை மட்டும் காவல்நிலையத்தில் வைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் இருந்த 3ம் எதிரி சூர்யாவை புஷ்பராகவியின் பெற்றோர்கள் பண செல்வாக்கு உள்ளவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளோம்

என்றால் சரியல்ல. 3ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)